செய்தி வெளியீடு எண்: 30 9/1/10

# பத்திரிகை செய்தி

தமிழ்ப் புத்தாண்டு தினமான "பொங்கல்" திருநாளில், பொங்கலிட தேவையான தரமான பொருட்களை உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து, நியாயமான விலையில் மக்களுக்கு விற்பனை செய்ய, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. சென்னை நகரில், அண்ணா நகர், சாந்தி காலனி, ஆவடி, பெரியார் நகர், மைலாப்பூர் (ஆர்.கே. மடம் சாலை), ராயப்பேட்டை (வி.எம். சாலை), கோபாலபுரம், ஆழ்வார்பேட்டை (சி.பி. இராமசாமி சாலை), இந்திரா நகர், திருவான்மியூர், நந்தனம், தாம்பரம், அசோக் நகர், கே.கே.நகர், கீழ்ப்பாக்கம், அரும்பாக்கம் (எம்.எம்.டி.ஏ. காலனி), சின்மயா நகர், போரூர், சூளை மேடு அண்ணா நெடும்பாதை மற்றும் கோடம்பாக்கம் (ஆற்காடு சாலை) ஆகிய 21 பகுதிகளில் உள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக அமுதம் பல்பொருள் அங்காடிகளில் பொதுமக்களின் நலன் கருதி, பச்சரிசி ½ கிலோ, வெல்லம் ½ கிலோ, பாசிப்பருப்பு 100 கிராம், உலர்ந்த திராட்சை, முந்திரி, ஏலக்காய் மூன்றும் சேர்த்து 20 கிராம், நெய் 20 கிராம் ஆகிய பொருட்கள் அடங்கிய ரூ. 65/- மதிப்புள்ள பொங்கல் பைகள் தயார் செய்யப்பட்டு, பை ஒன்று ரூ. 50/- என்று குறைந்த விலையில் விற்பனை செய்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக அமுதம் பல்பொருள் அங்காடிகளில் குறைந்த விலையில் பொங்கல் பைகளை தங்களது தேவைக்கேற்ப வாங்கி பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-- மா. வீர சண்முக மணி,
நிர்வாக இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9